**ஓய்வூதியச் சுற்று நிருப இலக்கம்: 03/2015 (மீளாய்வு I)**

எனது இலக்கம்: ஓய்வூ/சுற்றுநிருபம்/2015
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
01-10-2015.

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள்/ திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/ முப்படைத் தளபதிகள்,
பிரதேச செயலாளர்களிற்கு,

**ஓய்வு பெறும் திகதிலேயே ஓய்வூதிய நலன்களைப் பெற்றுக் கொடுத்தல்.**

மேற்குறித்த விடயம் தொடர்பில் என்னால் வெளியிடப்பட்ட **ஓய்வூதியச் சுற்றுநிருப இலக்கம் 03/2015** இற்கு விதிமுறைகளுக்கு மேலதிகமானது.

02. விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய இலக்கமின்றி அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்ற பங்களிப்பாளர்களது ஓய்வு பெறச் செய்யும் விண்ணப்பங்கள் தற்சமயம் ஓய்வூதியத் திணைக்களத்திடம் அனுப்பப்படாமையின் காரணமாக அவ் உத்தியோகத்தர்களது ஓய்வு பெறுதல்கள் தாமதமடைவதனால் ஓய்வூதிய நலன்களைப் பெற்றுக் கொடுத்தலும் தாமதமடைகின்றது.

03. பொதுச் சேவையில், புதிதாக நியமனம் பெறும் உத்தியோகத்தரொருவரின் குறித்த நியமனத் திகதியிலிருந்து சுயவிபரக் கோவையினை இற்றைப்படுத்துதல், விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் பதிவு செய்தல் மற்றும் அதன் பின்னர் பங்களிப்புத் தொகைகளை அறவிட்டு அவை தொடர்பிலான ஆவணங்களைப் பராமரித்துச் செல்லுதல் என்பன நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எனினும் குறித்த செயற்பாடுகளில் காணப்படும் நலிவீனங்கள் காரணமாக ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் ஓய்வூதியதாரர் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றார் என்பது திணைக்களத்தின் அவதானிப்பாகும்.

04. ஓய்வு பெறும் அரச உத்தியோகத்தர்களுக்குரிய அனைத்து நலன்களையும் ஒன்று திரட்டி ஒரே தினத்தில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் படி ஏதேனுமோர் உத்தியோகத்தரது ஓய்வூதிய நலன்களை வழங்கும் பொருட்டு நிறுவனத் தலைவரினால் ஓய்வூதியத் திணைக்களத்திடத்தே 03/2015 சுற்றுநிருபத்தின் படி PD 03 விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கையில் **விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய இலக்கத்தினைப் பெற்றிராவிடிலும்** குறித்த விண்ணப்பங்களை ஓய்வூதியத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க முடியும். எனினும் அவ்வாறான விண்ணப்பதாரர்கள் 01-10-2015 ஆந் திகதி முதல் இணையத்தளத்தின் ஊடாக விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய இலக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளைக் கட்டாயமாக மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதனை அறியத் தருகின்றேன்.

05. அவ்வாறே விதவைகள்/தபுதாரர்/அனாதைகள் (26 வயதிலும் குறைந்த தொழிலற்ற) மற்றும் வலது குறைந்தோர் ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டினையும் இணையத்தின் மூலம் மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அதன் பொருட்டு 1898 இலக்கம் 01 கொண்ட விதவைகள் அனாதைகள் ஓய்வூதியச் சட்டத்தின் 8, 9, 10 மற்றும் 11 எனும் உறுப்புரைகள் மற்றும் 1981 இலக்கம் 44 கொண்ட மீளாய்வுச் சட்டத்தின் 05 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அனைத்து அரச உத்தியோகத்தர்களிடமிருந்தும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகைகளை அறவிடுதல் நிறுவனத் தலைவரின் பொறுப்பாகும். குறித்த அறவீடுகளை உறுதிப்படுத்தி நிறுவனத் தலைவரினால் வி.அ.ஓ. 16 (நி.பி. 1792) மாதிரிப்படிவத்தின் மூலம் உத்தியோகத்தர் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் ஓய்வூதியத் திணைக்களத்திடம் பெற்றுக் கொடுப்பது அத்தியாவசியமானதாகும்.

06. ஆதலால் மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் தங்களது தயவுமிகு கவனத்தினைத் திருப்பி, ஓய்வு பெறச் செய்யும் செயற்பாட்டினைத் திறம்பெறச் செய்வதன் மூலம் நலன்தாரிகளிடத்தே துரிதமாக சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான ஒத்துழைப்பினை வேண்டுகின்றேன்.

**(ஒப்பம்)**
**எஸ்.எஸ். ஹெட்டிஆரச்சி,**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.**

பிரதிகள்

01. சனாதிபதி செயலாளர்.
02. பிரதமரின் செயலாளர்.
03. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.
04. செயலாளர் - நிதி அமைச்சு.
05. கணக்காய்வாளர் நாயகம்.